www.Padasalai.Net www.TrbTnpsc.com

V7T

விருதுநகர் மாவட்டம்

தொகுத்தறித் தேர்வு - டிசம்பர் 2023

வகுப்பு 7

காலஅளவு: 2.00 மணிநேரம் தமிழ் மதிப்பெண்கள்: 60

பகுதி - I

அ) அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்க. 10×1=10

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1) தன்குடிமையைச் சிறந்த குடியாகச் செய்ய விரும்புபவரிடம் ........... இருக்கக் கூடாது.

அ) சோம்பல் ஆ) சுறுசுறுப்பு இ) ஏழ்மை ஈ) செல்வம்

2) காலத்தின் அருமையைக் கூறும் திருக்குறள் அதிகாரம் ..........

அ) கல்வி ஆ) காலமறிதல் இ) வினையறிதல் ஈ) மடியின்மை

3) வேயாமாடம் எனப்படுவது ..........

அ) வைக்கோலால் வேயப்படுவது ஆ) சாந்தினால் பூசப்படுவது

இ) ஓலையால் வேயப்படுவது ஈ) துணியால் மூடப்படுவது

4) பெயர்ப்பகுபதம் ............ வகைப்படும்

அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு ஈ) ஏழு

ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக

5) கப்பல் கட்டுவதற்குப் பயன்படும் மர ஆணிகள் ............ என அழைக்கப்படும்.

6) கலம்காரி ஓவியம் என்று அழைக்கப்படுவது ................

இ) பொருத்துக

7) பிடி - சமம்

8) பருமல் - இரத்தம்

9) வடசொல் - குறுக்கு மரம்

10) நிகர் - முதனிலைத் தொழிற்பெயர்

பகுதி - II

ஈ) ஓரிரு சொற்களில் விடையளிக்க. (ஏதேனும் ஐந்து வினாக்கள் மட்டும்) 5×2=10

11) நன்மை செய்வதிலும் தீமை உண்டாகும் எப்போது?

12) கலங்கரை விளக்கத்தில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்?

13) பதத்தின் இரு வகைகள் யாவை?

14) கல்வி அறிவு இல்லாதவர்கள் பற்றி வள்ளுவர் கூறுவது யாது?

15) தோணி என்னும் சொல்லின் பெயர்க் காரணத்தைக் கூறுக.

16) ஒரு கலை எப்பொழுது உயிர்ப்புடையதாக அமையும்.

17) இயற்சொல்லின் நான்கு வகைகள் யாவை?

உ) ஓரிரு தொடர்களில் விடை தருக. (ஏதேனும் மூன்று மட்டும்) 3×4=12

18) தரைவழிப்பயணம், கடல்வழிப் பயணம் ஆகியவற்றுள் நீங்கள் விரும்புவது எது? ஏன்?

19) கீரைப்பாத்தியும் குதிரையும் எக்காரணங்களால் ஒத்திருக்கின்றன?

20) வளர்தல், பேசுதல் - இவை எவ்வகைப் பெயர்கள்? விளக்கம் தருக.

21) தந்த ஓவியங்கள் கேரளாவில் அதிகம் காணப்படுவது ஏன்?

22) இலக்கிய வகைச் சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - III

**ஊ) ஏவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் விடையளி.** **5×2=10**

23) ஓர் எழுத்துச் சொற்களால் நிரப்புக.

அ) ............ சுடும்.

ஆ) ............ மணம் வீசும்.

24) பின்வரும் சொற்களை இருபொருள் தருமாறு தொடரில் அமைத்து எழுதுக.

படி

25) பொருத்தமான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக.

அ) நாங்கள் நேற்று கடற்கரைக்குச் செல்கிறோம்

ஆ) கண்மணி நாளை பாடம் படித்தாள்

26) கொடுக்கப்பட்டுள்ள சொல்லை ஒரு தொடரில் முதல் மற்றும் இறுதிச்சொல்லாகக் கொண்டு சொற்றொடர் உருவாக்குக.

இசை

27) கலைச்சொல் அறிக.

அ) Anchor - ஆ) Brush -

28) இடைச்சொல் ஐ சேர்த்துத் தொடரை மீண்டும் எழுதுக.

அ) கடல் பார்த்தாள்

ஆ) அறம் கூறினார்

29) உன் பொறுப்புகள் இரண்டு எழுதுக.

## பகுதி - IV

**எ) பின்வரும் கவிதைப் பகுதியை அடிபிறழாமல் எழுதுக.** **4+2=6**

30) கட்டி ... எனத் தொடங்கும் இரட்டுறமொழிதல் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

31) எண்ணி ... எனத் தொடங்கும் குறளை எழுதுக.

**ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி** **1×6=6**

32) நீங்கள் சுற்றுலா வழிகாட்டியாக இருந்தால் வள்ளுவர் கோட்டம்/திருவள்ளுவர் சிலை இடத்தைப் பார்வையிட வருபவர்களுக்கு எவ்வாறு விளக்கிக் கூறுவீர்கள்?

33) மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.

**ஐ) ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி** **1×6=6**

34) உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத் தர வேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

35) எங்கள் ஊர் - கட்டுரை எழுதுக.

- - - - - - - -

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com